www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி






ஞானம் 6 - ஒலி 48 - 10.12.2023

# விடாமுயற்சி வெட்கிப்போவதில்லை





**தலையங்கம்**

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

இயேசு கிறிஸ்துவில் பிரியமான எனதருமை சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள்.

சாதனையாளனை எந்த சாக்காடும், சதியும், சல்லிப்பயல்களும் சாய்க்க முடியாது. ஆல விருட்சத்தின் வளர்ச்சியை அதன் அடியில் வளரும் சிறு புற்பூண்டுகளால் தடுக்க முடியாதல்லவா? இரண்டாம் உலகப் போரின் உக்கிரத்தில் அமெரிக்க விமானக் குண்டுகளால் சாய்கிரோ ஹோண்டாவின் தொழிற்கூடத்தை மட்டுமே சிதைக்க முடிந்தது. ஆனால், சாய்கிரோ ஹோண்டவை சாய்க்க முடியவில்லை.

அச்சமயத்தில் ஜப்பான் சின்னா பின்னமாகியிருந்தது. அதன் பொருளாதாரம் எந்தவித ஆதாரமும், ஆதரவும் இல்லாமல் சாம்பலாகிப் போயிருந்த காலக்கட்டம். மக்களின் மனநிலை சுக்கு நூறாகிப் போயிருந்தது. அனைவரும் நடைப்பிணங்களாக நடமாடி வந்தார்கள். பெட்ரோல் தட்டுப்பாடு கார்கள் அனைத்தையும் முடக்கிப்போட்டிருந்தது. மக்கள் அனைவரும் கால்நடையாகவே எங்கும் சென்று வந்தார்கள். வாய்ப்புள்ளவர்கள் சைக்கிளில் வலம் வந்தார்கள்.

அந்த சமயத்தில் சாய்கிரோ வீட்டில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தார். அவருக்கு எந்தப் பிரச்னை வந்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல், அதை வெற்றிகொள்ள என்ன வழி என்பதையே யோசிக்கும் வழக்கம் கொண்டவர். அவர் இடிந்து உட்காரவில்லை...மாற்று வழி என்ன, பிழைக்க வழி என்ன என்று யோசிக்கலானார்.

அப்போதுதான், ஹோண்டாவின் எண்ணத்தில் ஓர் புரட்சி ஏற்படுத்தப் போகும் ஐடியா வந்தது. அவர் அருகில் அவரது சைக்கிள் இருந்தது. அதன் அருகிலேயே, புல் வெட்டும் இயந்திரம் இருந்தது. அவை இரண்டையும் பார்த்தார். அந்த புல் வெட்டும் இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள மோட்டாரை அந்த சைக்கிளில் இணைத்து ஏன் மோட்டார் சைக்கிளை உருவாக்கக் கூடாது என்ற யோசனையில் உருவானது உலகின் முதல் மோட்டார் சைக்கிள்.

அவர் நினைத்தபடியே, அது அற்புத இரண்டு சக்கர வாகனமாக மாறியது. அதை எடுத்துக் கொண்டு, வீதிகளில் வலம் வந்தார். அனைவரும் அதை ஆச்சரியமாகப்

பார்த்தார்கள். ஏராளமான மக்கள் அதேபோன்ற மோட்டார் சைக்கிளை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஆர்டர்கள் குவியக்குவிய ஆவரும் சளைக்காமல் அத்தனை மோட்டார் சைக்கிள்களையும் உருவாக்கித் தந்தார். அதனால் மோட்டார் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. மோட்டார் சைக்கிள் தொழிலை மேம்படுத்துவதற்கு ஏராளமான பணம் தேவைப்பட்டது. எந்த வங்கியும் அவருக்குக் கடன் கொடுக்கத் தயாராயில்லை. ஹோண்டா ஒரு துர் அதிஷ்டக்காரன் என்று அவரை யாரும் மதித்து உதவ முன்வரவில்லை.

எப்போதும் நல்ல எண்ணத்தை முதலில் எல்லோரும் கேலி செய்வார்கள், பிறகு தவிர்ப்பார்கள், அதன்பிறகு எதிர்ப்பார்கள், அது வெற்றியடைந்த பிறகு, யாரெல்லாம் எதிர்த்தார்களோ அவர்களே அதை பாராட்டுவார்கள். சாய்கிரோ மட்டும் விதிவிலக்கா என்ன?

எதிர்ப்பு வரும்போதுதான், எல்லையற்ற புதுமையான ஐடியாக்களும், வாய்ப்புகளும் குவியுமல்லவா, அதன்படி பண உதவி செய்யும்படி 18 ஆயிரம் சைக்கிள் கடைக்காரர்களுக்கு கடுதம் எழுதினார். அக்கடிதத்தில், யாரெல்லாம் தனது மோட்டார் சைக்கிள் தொழிலுக்கு முதலீடு செய்கிறார்களோ, அவர்கள் அனைவரும் தான் தயாரிக்கும் மோட்டார் சைக்கிள்களின் விநியோகஸ்தர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று வாக்குறுதி அளித்திருந்தார்.

அந்த 18ஆயிரம் சைக்கிள் கடைக்காரர்களில் சுமார் ஐயாயிரம் சைக்கிள் கடைக்காரர்கள் முன்வந்து முதலீடு செய்தார்கள். அதனால், ஹோண்டா மோட்டார் சைக்கிள் நிறுவனம் உருவானது.

அந்த நிறுவனத்தில் உருவான மோட்டார் சைக்கிள்களைக் குறித்து ஏராளமான விமர்சனங்கள் வந்தன. அவற்றால் அவர் சங்கடப்பாடாமல், அவைகள் மிகச்சிறந்த ஆலோசனைகளாக ஏற்று அவற்றைச் சரிசெய்யும் வேலைகளை ஆரம்பித்தார். அவரின் உலோக உருக்காலையில் உட்கார்ந்து, புதுப்புது வடிவங்களை உருவாக்கி, அதனை மேலும் சோதனைக்கு உட்படுத்தி தயாரான மோட்டார் சைக்கிள்களை அந்தத் தொழில்கூடத்திலேயே பரிசோதித்து, தவறுகளையும், குறைகளையும் நிவர்த்தி செய்து, மெருகேற்றி, பல்வேறு புதுமையான வடிவங்களில் அழகான மற்றும் கவர்ச்சியான மோட்டார் சைக்கிள்களை உருவாக்கினார். அதைவிட, அவற்றின் இயங்கும் திறன் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அவற்றை வாங்குவதே, ஒரு பெருமைக்குரியதாக மக்கள் நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஹோண்டா கம்பெனியின் வாகனங்களுக்கு வெளிநாடுகளிலும் இருந்து ஏராளமான ஆர்டர்கள் குவிய ஆரம்பித்த பிறகு, ஹோண்டா உலகப்புகழ் பெற்றுவிட்டது.


இன்று ஹோண்டா நிறுவனம் வருடத்திற்கு 3.28 மில்லியன் கார்களையும், 4.14 மில்லியன் மோட்டார் வாகனங்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

ஹோண்டா நிறுவனம், அனைத்து நாடுகளிலும் உற்பத்தி நிலையங்களை உருவாக்கி, அந்த நாட்டினருக்கு ஏராளமான வேலை வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகின்றது. வாகன உற்பத்தியோடு ஹோண்டா நிறுவனம் உழவு இயந்திரங்கள், ஜெனரேட்டர்கள், பனி அகற்றும் இயந்திரங்கள், புல்வெட்டும் இயந்திரங்கள், பம்புகள், கப்பல் எந்திரங்கள், தனியார் நீர்க்கப்பல்களையும் உருவாக்கித் தருகின்றது. ஹோண்டாவின் தொழில் வளம் மக்களின் தேவைக்கேற்ப வளர்ந்துகொண்டே செல்கின்றது.

பெரும் காரியங்கள் ஆரம்பிக்கும்வரை கடும் போராட்டங்களை சந்தித்துத்தான் ஆகவேண்டும். அதன் பிறகு, அவற்றின் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது. சாதனையாருக்கு வேண்டியது, தளரா ஊக்கமும், உற்சாகமும்தான். அது அவர்களுக்குள் அளவில்லாது இருக்கும். அதை அவர்கள் உணர்ந்த பிறகு, வானமே எல்லை...ஏளனங்கள் வெட்கிட்போகும்......

# விவிலியம் அறிவோம்





## போருக்கான விதிமுறைகள்

இணைச்சட்டம் நூல் ஏற்கனவே பிரிவு 7:1-26 இல் போர்பற்றிப் பேசுகிறது. பிரிவு 20 இல் மேலும் பல சட்டங்கள் கொடுக்கப்படுகின்றன. இச 21-25 வரையுள்ள பிரிவுகளில் மேலும் போர்பற்றிய பல சட்டங்கள் கொடுக்கப்படும் (இச 21:10-14; 23:9-14; 24:5; 25:17-19). இன்றைய உலகில் வாழும் நமக்கு போர்பற்றிய இந்தச் சட்டங்கள் கொடூரமானதாக, ஏற்றுக்கொள்ள முடியாதனவாகத் தெரியலாம். ஆனால் ஒன்று மட்டும் நாம் மறக்கலாகாது. பண்டைய சமூகங்களில் வன்முறைகள் தவிர்க்க முடியாதனவாக இருந்தன. இஸ்ரயேல் மக்கள் போர்களின் மூலமாகத்தான் கானான் நாட்டைக் கைப்பற்றினார்கள். ஒரு சில அறிஞர்களின் பார்வையில் இஸ்ரயேலின் தொடக்ககால வரலாற்றில் போர் ஒரு வழிபாடாகவே இருந்தது. இஸ்ரயேலின் தொடக்ககாலப் போர்கள் புனிதப் போர்கள் என அழைக்கப்பட்டன. புனிதப்போர் என்பது முரண்பாடான ஒரு சொல்லாகத் தெரியலாம். வன்முறையை வழியாகக் கொண்டுள்ள போர் எப்படிப் புனிதமானதாக இருக்கமுடியும் என்ற கேள்வி எழலாம். இஸ்ரயேல் மக்கள் போரில் கைப்பற்றுகின்ற நகர்களையும்,அதில் வாழும் மக்களையும் அழிவுக்கு உட்படுத்தினார்கள். எபிரேய மொழியில் இப்பழக்கம் கேரெம் *(hearem)* என அழைக்கப்பட்டது. இச்சொல்லை அழிவுக்கு உட்படுத்துதல் என்ற பொருளில் புரிந்துகொள்ளலாம். ஆண்டவரே அவர்கள்முன் நின்று அவர்களுக்காகப் போர் புரிந்ததால் கைப்பற்றப்படும் நகரில் உள்ள அனைத்தும் ஆண்டவருக்கு உரியவை எனக் கருதப்பட்டது. ஆண்டவருக்கு உரியவை அனைத்தும் அழிக்கப்பட வேண்டும். போர் வீரர்கள் அழிவுக்குரியவற்றின் மீது எந்த உரிமையும் கொண்டாட முடியாது. கைப்பற்றப்படும் அனைத்தும் பொதுவாகத் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. கடவுளின் இந்தக் கட்டளையை மீறுபவர்கள் கடுமையாகத்

தண்டிக்கப்பட்டார்கள். இஸ்ரயேல் மக்கள் எரிகோ நகரைக் கைப்பற்றுகையில் யூதா குலத்தைச் சார்ந்த ஆக்கான் என்பவன் கட்டளையை மீறி அழிவுக்குரியவற்றிலிருந்து சிலவற்றைக் கவர்ந்துகொண்டான். இதனால் இஸ்ரயேல் மக்கள் மீது ஆண்டவரின் கோபம் மூண்டது. ஆயி நகரை இஸ்ரயேல் கைப்பற்ற முயன்றபோது தோற்றுப்போயினர். ஆக்கானின் தவறு கண்டுபிடிக்கப்பட்டு ஆக்கானும் அவனைச் சார்ந்தவர்களும் கொல்லப்படுவதுவரை அவர்களால் ஆயி நகரைக் கைப்பற்ற முடியவில்லை (யோசு 7).

எரிகோ நகர் கைப்பற்றப்பட்டபோது, நகரையும் அதனுள் இருந்த அனைத்தையும் நெருப்பிலிட்டு எரித்தனர். வெள்ளியையும், பொன்னையும், வெண்கல இரும்புப் பாத்திரங்களையும் மட்டுமே ஆண்டவரது வீட்டின் கருவூலத்தில் சேர்த்தனர் ... அச்சமயம் யோசுவா எழுந்து, எரிகோ என்னும் இந்நகரை மீண்டும் கட்டும் மனிதன் சபிக்கப்பட்டவன். அவன் கடைக்கால் இடுகையில் தன் முதல் மகனையும், அதன் வாயிற் கால்களை இடுகையில் தன் கடைசி மகனையும் இழப்பான் என்றார். (யோசுவா 6:24, 26). இஸ்ரயேல் மக்கள் குடியிருக்கும் நகர்களிலும் எந்த நகராவது வேற்று தெய்வங்களை வணங்கி வழிபட்டால் அந்த நகர் முழுவதும் அதில் குடியிருப்பவர்களும் அழிக்கப்பட வேண்டும் (இச 13:12-18). புனிதப் போர் என்ற கருத்து இணைச்சட்ட உடன்படிக்கைக்குப்பின் வருகிறது. பாலைவனப் பயணத்தில் இரண்டு தடவைகள் வேற்று தெய்வங்களால் ஈர்க்கப்பட்டு இஸ்ரயேல் மக்கள் அவற்றை வழிபட்டார்கள். இதனால் கடவுள் அவர்கள்மீது கோபம் கொள்கிறார். கானானியர்களின் கடவுளர்களிடமிருந்து இஸ்ரயேல் மக்களைக் காப்பதற்காகக் கடவுள் இந்தக் கட்டளையைக் கொடுக்கிறார். கானானியர்களை அவர்கள் முழுவதுமாக அழித்தொழிக்க வேண்டும்; அவர்களின் கடவுள் வழிபாட்டுடன் தொடர்புடைய அனைத்தும் அழிக்கப்பட வேண்டும். ஒருவிதத்தில் புனிதப்போர் கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு அளித்த சலுகை எனக் கூறலாம்.

புனிதப்போர் என்றச் சொல் விவிலியத்தில் எங்கும் பயன்படுத்தப்படவில்லை; ஆனால் பண்டைய மேற்காசிய நாடுகளின் சிந்தனையில் போர்கள் கடவுளர்களால் நிர்ணயிக்கப்பட்டு நடத்தப்படுகின்றன என்ற பார்வை இருந்தது. இந்தச் சிந்தனையின் ஒரு அடிப்படை நம்பிக்கை என்னவென்றால் போர்களின் முடிவுகள் விண்ணகத்தில் தீர்மானிக்கப்படுகின்றன என்பதாகும். போர் செய்யும் நாடுகளின் கடவுளர்கள் தங்கள் ஆற்றலாலும் அதிகாரத்தாலும் விண்ணகத்தில் போரின் முடிவுகளைத் தீர்மானிக்கின்றனர். எனவேதான் போருக்கான அறிவிப்பை குருக்கள் செய்தார்கள்; போர் தொடங்குமுன் குருக்கள் முன்வந்து போர் வீரர்களுக்குப் பேசினார்கள் (இச 20:2-4). இஸ்ரயேல் மக்கள் நடுவில் இந்தப் பழக்கம் இருந்தது. இஸ்ரயேலின்

ஆற்றல்; அவர்களின் எண்ணிக்கையிலோ, ஆயுதங்களிலோ இல்லை; மாறாக இஸ்ரயேலின் கடவுளால் அவர்கள் ஆற்றல் பெற்றவர்களாக விளங்கினார்கள். இஸ்ரயேல் எந்த அதிகாரமும் இல்லாமல் ஆற்றலற்றவர்களாக இருந்த காலத்தில்தான் ஆண்டவர் அவர்களைத் தேர்ந்தெடுத்தார்; ஆற்றல் மிகுந்த பேரரசான எகிப்திற்கு எதிராக போரிட்டு இஸ்ரயேலுக்கு வெற்றியைக் கொண்டு வந்தார். இதுதான் இஸ்ரயேல் மக்களின் அடிப்படை அனுபவம்.

இஸ்ரயேல் மக்கள் அடிக்கடி போர் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாலைவனப் பயணத்தின்போது அமோரியர்களுக்கு எதிராகவும் (எண் 21:23-26), மிதியானியர்களுக்கு எதிராகவும் (எண் 31:1-54) போரிட்டார்கள். யோசுவா மற்றும் நீதித்தலைவர்கள் நூல்கள் இஸ்ரயேலர் கானான் நாட்டை வெற்றி கொள்வதற்கு மேற்கொண்ட போர்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. பெலிஸ்தியர்களுடன் பல போர்கள் மேற்கொள்ள வேண்டிய தேவை இருந்தது. மூதாதையர்கள் காலத்தில் குலங்கள் ஒன்றிணைந்து பகைவர்களை எதிர்த்துப் போரிட்டனர். குலங்களில் உள்ள வீரர்கள்தான் இணைந்து போரிட்டனர். அவர்கள் முறையாக இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் கிடையாது. தேவைப்படும் நேரங்களில் குலங்களின் மூப்பர்கள் வலிமைவாய்ந்த ஆண்களை ஒன்று சேர்த்தார்கள் (தொநூ 14:13-16). இஸ்ரயேல் அடிக்கடி போரில் ஈடுபடுவதற்கு இன்னும் பல காரணங்கள் இருந்தன. இஸ்ரயேல் மக்கள் குடியேறிய பாலஸ்தீன நாடு பண்டைய மேற்காசிய நாடுகளின் முக்கியமான வணிகப் பாதையில் இருந்தது. வரலாற்றைப் பார்க்கும்போது பாலஸ்தீனம் பல பேரரசுகளின் எல்லைப் பகுதியாக அமைந்திருந்ததையும் காண்கிறோம். எனவே பகைவர்களின் முற்றுகையும் போரும் பற்றிய அச்சம் எப்போதும் அவர்களுக்கு இருந்து கொண்டே இருந்தது.

கானான் நாட்டை இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுள் வாக்களித்திருந்தார். ஆனால் அவர்கள் அதை வெற்றி கொள்ள வேண்டும். நாட்டை வெற்றி கொள்வதற்குப் போர்புரிய வேண்டியது கட்டாயம். இஸ்ரயேலரின் சட்டப்படி எல்லா ஆண்களும் போரில் கலந்துகொள்ள வேண்டும். ஒரு சில ஆண்களுக்கு இராணுவச் சேவையிலிருந்து விலக்கும் அளிக்கப்பட்டது. போர்கள் அவசியம் என்பதால் கானானியர்களுக்கு எதிரானப் போர்களுக்கான விதிமுறைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. கானான் நாட்டில் பின்பற்றப்பட்டு வந்த சில வழிபாட்டு முறைகள் இஸ்ரயேல் மக்களின் சமய வழிபாடுகளுக்கு எதிரானவையாக, அவைகளை அழிக்கக் கூடியவையாக இருந்தன. எனவே கானான் நாட்டை வெற்றிகொண்டு அங்கே குடியேறுவது இஸ்ரயேலர்களுக்குக் கடமையாக கொடுக்கப்படுகிறது. இவற்றை மனதில் கொண்டுதான் இச 20 வது பிரிவை நாம் சிந்திக்க வேண்டும்.

இச 20 வது பிரிவில் வருகின்ற

முதல் நான்கு வசனங்கள் (20:1-4) கடலின் பாடலை (விப 15:1-18) நினைவுக்குக் கொண்டு வருகின்றன. பகைவர்களின் படைத்திறனைக் கண்டு இஸ்ரயேல் மக்கள் அஞ்சவேண்டாம்; ஏனெனில் ஆண்டவர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அழைத்து வந்தவர். தொடர்ந்து அவர்களை வழி நடத்துகிறார். அவர்களோடு பயணிக்கிறார். எனவே அஞ்சத்தேவையில்லை.

இஸ்ரயேலேகேள்! (இச 20:3) என்ற சொற்றொடர் முதன்மைக் கட்டளையை நினைவில் கொண்டு வருகிறது. இஸ்ரயேலே, செவி கொடு! நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உங்களுக்காக உங்கள் பகைவருக்கு எதிராகப் போர் புரியவும், உங்களைக் காப்பாற்றவும் உங்கள் கடவுளாகிய ஆண்டவரே உங்களோடு செல்கிறார். எனவே அச்சப்படத் தேவையில்லை. போரைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். இச 20:5-20 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1) இராணுவச் சேவையிலிருந்து விடுதலை பெறவேண்டியவர்கள் (இச 20:5-9). 2) பகைவர்களுடன் பேச்சுவார்த்தை (இச 20:10-18). 3) போரினால் இயற்கைக்கு ஏற்படும் இழப்பு (இச 20:19-20). இராணுவச் சேவையிலிருந்து விடுதலை பெறவேண்டியவர்களைப் பற்றிக் குறிப்பிடும் சட்டங்களில் மனித நேயமும், இரக்கமும் வெளிப்படுவதைப் பார்க்கிறோம். புது வீட்டைக் கட்டி அதை அர்ப்பணம் செய்யாதவர், திராட்சைத் தோட்டம் அமைத்து அதன் பலனை அனுபவிக்காதவர், ஒரு பெண்ணை மண உறுதிப்பாடு செய்தும் அவளோடு கூடி வாழாதவர் போரில் பங்கெடுக்கத் தேவையில்லை என கூறப்படுகிறது. இந்த வார்த்தைகள் மனித நேயத்தைக் கொண்டாடுகின்றன. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது சொத்தையும், மண வாழ்வையும், குடும்பத்தையும் அனுபவிக்க அதிகாரம் உண்டு. அவற்றை ஆபத்திலிருந்து காக்கவேண்டிய கடமையும் உண்டு. இன்றைய சமூகத்திலும் இராணுவத்தில் பணிபுரிபவர்களுக்குச் சில முக்கியமான காரணங்களுக்காக விடுமுறை போன்ற விலக்குகள் அளிக்கப்படுகின்றன. உதாரணமாக ஓர் இராணுவ வீரரின் உடன் பிறந்தவர்கள் போரில் இறந்து விட்டால் அவர்களுக்கு விடுமுறை அளிக்கப்படும். ஒருவருடைய பெயரும் அவருடைய சொத்துரிமையும் நிலத்திலிருந்து முழுவதுமாக அகற்றப்படக் கூடாது என்ற சிந்தனை இஸ்ரயேல் மக்கள் நடுவில் வலுவாக இருந்தது; ஆனால் வரலாற்றில் இந்த உரிமைகள் சில நேரங்களில் மறுக்கப்பட்டுள்ளதையும் (2 சாமு 12:9; 1 அரசர் 21:3)காண்கிறோம். அவ்வாறு மறுக்கப்படுவது அநீதியாகப் பார்க்கப்படுகிறது. கடவுளால் கடிந்துகொள்ளப்பட்டு தீர்ப்புக்கு உட்படுத்தப்படுகிறது.

ஒரு நகருக்கு எதிராகப் போரிடுகையில் வயல்வெளிகளில் நடப்பட்டுள்ள பழமரங்களை வெட்டி அழிக்கக்கூடாது என்ற கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது; ஆனால்

உணவுக்கு உதவாத மரங்களை வெட்டலாம் எனக் கூறப்பட்டுள்ளது. ஒரு நகரை முற்றுகையிடுகையில் மரங்களை அழிப்பது சில அடிப்படைக் கேள்விகளை எழுப்புகின்றன. ஆனால் பழமரங்களை அழிக்காமல் பாதுகாப்பது விவசாயத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவமாகக் கருதலாம். இயற்கை இறையியலுக்கும் உதவலாம். ஆனால் கேள்வி ஒன்று எழுகிறது. எந்தச் சூழ்நிலையில் ஏன் மனிதர்களைவிட மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்? போரில், கடவுளாகிய ஆண்டவர் அதை உன் கையில் ஒப்படைக்கும்போது, அதிலுள்ள எல்லா ஆண்களையும் வாளால் கொன்றுவிடு. ஆனால், பெண்களையும் சிறுவர்களையும், ஆடு மாடுகளையும் நகரிலுள்ள அனைத்தையும் உன் கொள்ளைப் பொருளாகக் கொள். உன் கடவுளாகிய ஆண்டவர் எதிரியிடமிருந்து உனக்குக் கொடுத்துள்ள கொள்ளைப் பொருள்களை நீ அனுபவிக்கலாம் (இச 20:13-14) எனக் கூறப்பட்டுள்ளது. மனிதர்களையும், ஏனைய உயிரினங்களையும்விட மரங்கள் உயர்ந்தனவா? ஏன் மரங்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் மனிதர்களுக்குக் கொடுக்கப்படவில்லை? இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்க வேண்டுமென்றால் போருக்கான இந்த விதிகள் எழுதப்பட்ட காலத்தையும், சூழ்நிலைகளையும் நாம் அறியவேண்டும் இணைச்சட்ட நூலில் எழுதப்பட்ட இந்த போருக்கான விதிகள் அவை எழுதப்பட்ட காலத்தை வெளிப்படுத்துகின்றன என நாம் கூறலாம். இந்நூலில் போரில் ஏற்படும் வன்முறைகள்,போரினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள், துன்பங்கள் ஆகியவையும் வெளிப்படுத்தப்படுகின்றன.

பயணம் தொடரும்,
அருட்பணி ஆ. அலெக்ஸ் ஊஆகு





அருட்தந்தை.ஸ்டீபன் கஸ்பார்
புனித.சகாய மாதா ஆலயம், சின்னாளபட்டி, திண்டுக்கல் மறைமாவட்டம்

## திருவருகைக்காலம் 2ம் வாரம் ஞாயிறு - 10.12.2023

### எசாயா 40/1-5, 9-11, 2 பேதுரு 3/8-14, மாற்கு 1/1-8

# மனம் மாற, எச்சரிக்கும் காலம்

இறை இயேசுவிலே, எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே. திருவருகைக் காலம் ஓர் எச்சரிக்கைக் காலம். ஆண்டவர் இயேசுவின் வருகையையொட்டி, நாம் மனம் திருந்தி, மனம் மாறி ஆண்டவரின் வருகைக்காக நம்மைத் தயார் செய்ய நமக்கு எச்சரிக்கை தருகிற காலமாகும்.

இன்றைய நற்செய்தியின் கதாநாயகன் திருமுழுக்கு யோவான். இவர், ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள், அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள் (மாற் 1/3) என்கிறார். இவர் அமைதியி அரசருடைய வழியை ஆயத்தப்படுத்த இறைவாக்கினர் மலாக்கிக்குப்பின் 450 ஆண்டுகுக்குப் பின்னர், அனுப்பப்பட்ட இறைவாக்கினர். பழைய ஏற்பாட்டின் இறுதி, புதிய ஏற்பாட்டின் முதல் இறைவாக்கினராவார்.

இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர், யோவான் இறைவாக்குரைக்க, இவர்தான் வாக்களிக்கப்பட்ட மெசியா என்று எண்ணி, அவரைப் பின்தொடர்கிறார்கள். அப்போது திருமுழுக்கு யோவான், தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுக்க ஒருவர் எனக்குப்பின் வருகிறார். அவர்தான் மெசியா. பொறுமையாகக் காத்திருங்கள் எனச் சொல்லி, அம்மக்களை ஆண்டவர்பால் திருப்பிவிடுகிறார். நம் உள்ளங்களை யார் பக்கமாய்த் திருப்பியுள்ளோம். இறை வார்த்தையாய், திருவுடலாய் நம்முள் அனுதினமும் நம் உள்ளங்களைச் செம்மைப்படுத்தி, அவரை வரவேற்கக் காத்திருப்போம். அவரின் 2ம் வருகையில் அவர் அருளும் பரிசினைப் பெற முயலுவோம். இறை வார்த்தையை உள்வாங்குவோம்.

இன்றைய முதல் வாசகம் இஸ்ரயேலே உன் பாவங்களை உன் ஆண்டவர் மன்னித்துவிட்டார். எனவே, கலங்காதே, அக்களித்து அகமகிழ். ஆண்டவர் உன்னை உயர்த்திப் பிடிக்கப் போகிறார் எனச் சொல்கிறது.

இன்றைய 2ம் வாசகத்தில், வருவேன், என்று சொன்ன ஆண்டவர் இன்னும் வரவில்லை, காலம் தாழ்த்துகிறார் என எண்ணாமல், நாம் அனைவரும் மீட்புப் பெறவே அவர் காலம் தாழ்த்தி பொறுமையோடு காத்திருக்கிறார் என பவுல் கூறுகிறார்.

அன்பான இறைச் சமூகமே, குறுக்கு

வழியில் நடந்து குறுகலான சிந்தனைக்கு ஆட்பட்டு, சுயநலங்கலான பல்வேறு விருப்பங்களுக்கு உடன்பட்டு, மனித நலன்களை மேம்படுத்தாது கைவிட்டு, சுயநலம்கொண்ட, கோணலான பாதையை இயேசுவின் மதிப்பீடுகளான, உண்மை, நீதி, நேர்மை, அன்பு, சமத்துவம், இரக்கம் இவற்றால் சரி செய்து கொள்வோம். கடவுளின் பாதை நேரானதாகவும், சமமானதாகவும், தடையற்றதாகவும், இருக்கும்படி பார்த்துக் கொள்வோம். இதற்கு அடிப்படை - மனமாற்றமே. இதையே திருமுழுக்கு யோவான் தன்னுடைய மீட்பருக்கான பணியாக, பாதைகளைச் செம்மைபடுத்தும் பணியாக, வழிகளை அமைக்கக்கூடிய பணியாக, அவர் செய்தார் என்று நாம் செய்தியில் கேட்டோம்.

- மனமாற்றம் - என்பது குற்றங்களுக்காக மனம் வருந்துதலை மட்டும் குறிப்புடுவதில்லை. அது முழுமையான மாற்றத்தைக் காட்டுவதாகும். அது இயேசுவைப் பின்பற்றிக் கொள்வதாகும். நம்மிலே தாழ்த்தப்பட வேண்டிய குன்றுகள், நேராக்கப்படவேண்டிய கோணல்கள், சமதளமாக்கப்படவேண்டிய கரடுமுரடானவை என இந்த நாட்களில் அறிந்து திருத்த முயலுவோம். ஒட்டு மொத்தமாக இறைவன் வருகிறார், சந்திக்கத் தயாராகுங்கள் என யோவான் ஒலிக்கும் குரல் நம் செவிகளைத் தொடட்டும்.

கடவுளோடு கொண்டுள்ள உறவை மீண்டும் நிலை நாட்ட , மனம் திரும்பங்கள், என அவர் கொடுக்கும் அழைப்பை உள்வாங்குவோம். மூன்று முறை தன்னை மறுதலித்த பேதுருவைப் பார்த்து 3 முறை யோவானின் மகன் சீமோனே என்மீதுஅன்பு செலுத்துகிறாயா? என்று கேட்டு தன் மன்னிப்பின் மகத்துவத்தைக் காட்டுகிறார். நம் ஆண்டவர் இயேசு மனம் வருந்திய பேதுருவோ, இறுதி மூச்சுவரை ஆண்டவரின் வார்த்தையை ஏற்று, இறை ஆட்சியைக் கட்டி எழுப்புவதில், அறிவிப்பதில், தன்னையே ஒப்புக்கொடுத்ததைப் பார்க்கிறோம்.

இன்றைய உலகில்-பாவ மன்னிப்பு- என்ற அருளடையாளம், பொருளற்றதாய் மாறிக்கொண்டு இருக்கிறது. பல நேரங்களில், சில சபையாரின் சொல்லைக்கேட்டு, நேராகக் கடவுளிடம் என் பாவங்களைச் சொல்லி மன்னிப்புப் பெறுவேன் என்று நினைத்து நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்கிறோம். ஆண்டவர் இயேசு ஒப்புரவு அடையாளத்தின் மேன்மையை, யோவான் 20/23-ல் எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ அவை மன்னிக்கப்படா என்று சொன்னார். எனவே, ஒப்புரவு அருள் அடையாளத்தில் நம்பிக்கை வைத்து, நல்ல ஒப்புரவு செய்து, அதன் வழியக இறைவனின் பரிவிரக்கத்தைப்பெற நாம் முயற்சி எடுப்போம். அருட்பணியாளர்களிடம் நம் குற்றங் குறைகளை, தவறுகளை எடுத்துச் சொல்லி மேலும் தவறான செயல்களில் ஈடுபடப்போவதில்லை என்று தீர்மானிப்பது ஒரு நல்ல செயலாகும்.

திருமுழுக்கு யோவான் என்னைவிட வல்லமைமிக்க ஒருவர் எனக்குப்பின் வருகிறார். அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை (மாற் 1/8) என்கிறார். ஆம், மனமாற்றத்திற்குத் தடையாய் உள்ளது நம் ஆணவம். குன்றுகள் தாழ்த்தப்படவேண்டும். அதாவது, ஆணவத் திமிர் என்ற குன்று தரைமட்டமாக்கப்பட வேண்டும். திருமுழுக்கு யோவானைப்போலத் தாழ்த்திடவேண்டும்.

நம் ஆண்டவர் தம்மையேத் தாழ்த்தி, அடிமையின் வடிவெடுத்த ஆண்டவர், இயேசு கிறிஸ்து அழகிய குடிலில் பிறப்பதைவிட, நெஞ்சக் குடிலில் பிறப்பதையே விரும்புகிறார். அந்த நம் நெஞ்சக்குடில் தாழ்ச்சி என்னும் குடிலாகத்தான் இருக்க முடியும். நாமும், தாழ்ச்சியில் சிறந்து மனமாற்றம் அடைந்து, மறு கிறிஸ்துக்களாய் மாறுவோம். ஆமென்.



# திருவருகை காலம் இரண்டாம் ஞாயிறு

எசா. 40 : 1-5, 9-11 2பேது. 3 : 8-14

மாற். 1: 1-8

**10-12-2023**




பா. சேவியர்

திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

அமைதி என்ற விளக்கேற்றி, மனமாற்றம் பெறவேண்டும் என்ற உறுதியோடு வருகை தந்துள்ள, அமைதியை நாடும் அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் திருவருகை காலம் இரண்டாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

பாவங்களை நியாயப்படுத்தாமல் தாழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளவும், இறைவன் தரும் புதிய வாழ்வைத் தழுவி மனமாற்றம் பெற்று வாழவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்

இன்றைய வழிபாடு மனமாற்றம் என்ற கருத்தை மையமாகக் கொண்டுள்ளது. பொய்மையிலிருந்து வாய்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், தீமையிலிருந்து நன்மைக்கும் திரும்பி வருவதே மனமாற்றம் என்பதை வலியுறுத்துகிறது.

இறைவனை சந்திப்பதற்காக, நம்மை நாமே தயாரித்துக் கொள்வதற்கு உதவியாகத் திருச்சபை திருமுழுக்கு யோவானை முன்மாதிரியாக இன்று நம்முன் நிறுத்துகிறது. அவர் இயேசுவின் வருகையைப் பற்றி எடுத்துச் சொல்லி, அவரை எதிர்கொள்ள நம்மை தயார் செய்கிறார்.

பாலை நிலமாகக்கிடக்கும் அன்பற்ற நம் வாழ்வு, அன்பு மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலையாக மாற, பாவத்தால் பள்ளத்தாக்காய் மாறிப்போன நமது வாழ்வு புண்ணிய நெறிகளால் நிரப்பப்பட்டு சமதளமாய் அமைய, கோனலானதும் கரடு முரடானதுமான நமது சொல்லும் செயலும் நெறிப்படுத்தப்பட்டு சீராக, உண்மையான மனமாற்றம் அடைந்து மனந்திரும்பி தூய வாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

நாம் நம் தவறுகளை உணர்ந்து, வருந்தித் திருந்தும் போதுதான் கடவுள் நம்மீது இரக்கம் கொண்டு நம் குற்றங்களை மன்னிக்கிறார் என்ற நற்செய்தியை சுமந்து வருகிறது இன்றைய முதல் வாசகம். நம்பிக்கையூட்டும் ஆறுதல் மொழிகளைத் தரும் இவ் வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்துவின் மறுவருகையை ஆவலோடு எதிர்பார்த்து, அவ் வருகை தாமதப்பட்டதால் மனம் தளர்ந்திருந்த மக்களுக்கு ஆறுதலும் ஊக்கமும் தருகிறார் புனித பேதுரு. கிறிஸ்துவின் வருகைக்காய் காத்திருக்கும் நமக்கு நற்செய்தியாய் அமைந்துள்ள இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) தம் வாக்குறுதியை நிறைவேற்ற காலம் தாழ்த்தாத கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே இறைவா, நீர் தேர்ந்துகொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். திருமுழுக்கு யோவானைப்போல் இறையரசை ஏற்பதற்கு மக்களை தயார் செய்யும் விதமாக அவர்களது போதனைகளும் செயல்களும் அமைந்திட, அருட்பணிகளை அவர்கள் ஆர்வமுடனும் ஆற்றலுடனும் ஆற்றிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) மக்கள் யாரும் அழிந்து போகாமல் எல்லோரும் மனமாற வேண்டும் என விரும்பும் அன்பு இறைவா, மனமாற்றம் ஒன்றுதான் உமது வழியை ஆயத்தமாக்கும் செம்மையாக்கும் என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து, பாவ வழிகளை முழுமையாக விட்டகன்று, உமது அன்பு வழியில் எங்கள் வாழ்க்கைப் பயணம் தொடரவும், இயேசுவின் வருகைக்காய் எங்களை நாங்களே தகுந்த முறையில் தயாரித்து வாழவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) உடைந்த உள்ளத்தைத் திடப்படுத்துகின்ற அன்பு இறைவா, கடுமையான மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வீடு வாசல்களையும் வாழ்வாதாரங்களையும் இழந்து நிர்கதியாய் நிற்கும் மக்களைக் கருணை கண்கொண்டு பாரும். அரசாங்கமும் மனித நேயம் கொண்ட மக்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி அவர்களை மீட்டெடுக்கவும், அம்மக்கள் பழைய இயல்பு நிலைக்குத் திரும்பவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) எம் பிணிகளைத் தாங்கிக்கொள்கிறவரும், எம் சுமைகளை சுமந்து கொள்கிறவருமான அன்பு இறைவா, மழை வெள்ளத்தால், டெங்கு காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், காலரா போன்ற தொற்று நோய்கள் தாக்காமலும் பரவாமலும் அனைவரையும் பாதுகாத்தருளும். அந்நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் விரைந்து குணம் பெறவும், அனைவரையும் உமது சிறகுகளின் கீழ் அரவணைத்துப் பாதுகாத்திடவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.




தொல்லை செய்யாமல் என்றும் தொடர்பில் இருங்கள்
யாரும் உங்களைத் தொலைக்க முயற்சிக்கமாட்டார்கள்

மௌனமே அதிகாரத்திற்கு வலிமையைத் தருகிறது.
– லியோனார்டோ டாவின்சி

தனக்குத் தெரியும் என்று நினைக்கும் ஒன்றை
அவர் எப்போதும் கற்றுக்கொள்ள முடியாது. – எபிக்டெடஸ்

ஒருவரை அழிக்கும் அரக்கன் அவனது கட்டிலின்கீழே ஒழிந்திருப்பதில்லை
மாறாக அவனது தலையில் ஒளிந்திருப்பான்.

பிரசங்கத்தைக்கேட்டு மனந்திரும்பாதவர்களின் அழிவே
பயங்கரமாயிருக்குமானால்
மனந்திரும்பாமல் பிரசங்கிக்கிறவனின் அழிவு
எவ்வளவு பயங்கரமாயிருக்கும். – சி.எச்.ஸ்பர்சன்

சிங்கத்திற்கு எழுதத் தெரியாதவரை
ஒவ்வொரு வரலாறும், வேடனையேப் புகழும்.
– ஆப்பிரிக்கப் பழமொழி

அர்த்தமற்ற வார்த்தைகளைவிட
அர்த்தமுள்ள மௌனம் சிறந்தது.

ஒருவரின் அளவுக்கதிகமான சகிப்புத்தன்மை
மற்றவர் அவரை எப்படி நடத்தவேண்டும் என்பதற்கான
ஊக்க மருந்தாகும்.

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

# தேம்பாவணி

தேம்பாவணி என்னும் நூல் இயேசு கிறிஸ்துவின் வளர்ப்பு தந்தையான புனித யோசேப்பு மீது இயற்றப்பட்ட முதற்பெரும் செய்யுள் வகை நூலாகும். தேம்பாவணி கிறிஸ்தவ சமயத்தின் சுருக்கம் என்றே இந்நூலை அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்.

ஸ்பானிய நாட்டு ஆகிருத நகரில் வாழ்ந்த ஆகிர்த்த மரியாள் (Mariyal de Agreda) என்னும் கன்னி, மறைப்பொருளான இறைநகரம் என்னும் நூலை கன்னி மரியாவின் ஆணைப்படி எழுதியதாக கூறியுள்ளார். அந்த நூலில் இயேசுவின் வளர்ப்பு தந்தையான யோசேப்பு பற்றிய செய்திகளும் உண்டு. ஆகிர்த மரியின் அந்நூலைத் தழுவி தமிழ் மரபுக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் ஏற்ப இயற்றியிருக்கிறார் வீரமாமுனிவர். (கான்ஸ்டன்டைன் நோபுல் பெஸ்கி)

தேம்பா + அணி எனப் பிரித்து வாடாத மாலை என்றும் தேன்+பா+ அணி எனப் பிரித்து தேன் போன்ற இனிய பாடல்களின் மாலை என்றும் இதற்குப் பொருள் உண்டு. இயேசுவை வளர்த்த தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது. சூசையப்பருக்கு தேம்பாவணி எனப் பெயரிட்டு இந்நூலில் வீரமாமுனிவர் பாடியுள்ளார்.

தேம்பாவணியின் அரங்கேற்றம் கிபி 1726 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் அரங்கேற்றப்பட்டது. பல புலவர்களின் அடுக்கடுக்கான கேள்விகளுக்கும் சளைக்காமல் பதிலளித்த வீரமாமுனிவரிடம் தமிழ் புலவர்கள், எல்லாம் தெரியும் என கூறும் பெஸ்கி அவர்களே, வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கிறது என கூற முடியுமா? என நையாண்டியாக கேட்டார்கள். பதட்டமின்றி முப்பது முக்கோடி முப்பத்து மூன்று லட்சத்து முப்பத்தி மூவாயிரத்து முன்னூற்றி முப்பத்தி மூன்று நட்சத்திரங்கள் இருக்கின்றன. சந்தேகம் இருந்தால் எண்ணிப் பாருங்கள் என்றதும் சபையில் சிரிப்பொலி எழும்பி பலர் முனிவரை பாராட்டினார்கள். தேம்பாவணியின் சிறப்பைப் பாராட்டி மதுரைத் தமிழ்ச்சங்கம் பெஸ்கி பாதிரியாருக்கு ராஜஸ்ரீ என்ற பட்டம் அளித்து சிறப்பித்தது.

வீரமா முனிவர் வெளிநாட்டவராக இருந்தும் தமிழ் மரபைக் கருத்தாக கடைபிடிப்பது சிறப்பு. அவர் வர்ணிக்கின்ற பாலஸ்தீன நாடும், எருசலேம் நகரும் தமிழ்

மண்ணின் மணம் கமழ்வதாகவே உள்ளன. முன்னோர் மொழியைப் பொன்னே போல் போற்றிய வீரமாமுனிவர் திருவள்ளுவர், சீவக சிந்தாமணி பாடிய திருத்தக்கத் தேவர், கம்பர், மாணிக்கவாசகர் போன்றோரின் நடை, சொல், உவமை, கருத்து போன்றவற்றைச் சூழலுக்குப் பொருத்தமாக எடுத்தாள்கிறார்

எடுத்துக்காட்டாக கபிரியேல் வான தூதர், கடவுளின் நற்செய்தியை மரியாவிடம் உரைத்தபோது மரியா கலக்க முற்றதையும் அக்கலக்கத்தை வான தூதர் உணர்ந்த அறிந்தார் என்பதையும் விளக்கவந்த வீரமாமுனிவர்,

பளிங்கு அடுத்தவற்றைக் காட்டும் பான்மையால் இவள் முகத்தில்
உளம் கடுத்தவற்றை ஓர்ந்த
கபிரியேல் உறுதி சொல்வான்
(பாடல் 535)

என்ற வரிகளில் திருவள்ளுவரின்,

அடுத்தது காட்டும் பளிங்கு போல நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

என்னும் குறட்பா அமைவதைக் காணலாம்..

மீண்டும் மலரும்.
இயேசுவுக்கே மகிமை
லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 73

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு



### குறள் விளக்கம்

அருமையானஉயிர்க்குஉடம்போடுபொருத்திஇருக்கின்றஉறவு,அன்போடுபொருந்திவாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்

### சிந்தனை

அந்த முனிவரின் ஆசிரமத்திற்குள் அதிகார வெறிபிடித்த அரசன் நுழைந்தான். வாசலிலேயே தவத்தில் இருந்த முனிவரைப் பார்த்து, முனிவரே வணக்கம் என்றான். முனிவர் கண் திறக்கவில்லை. குரலை உயர்த்திப் பலமுறை வணக்கம் சொன்னான். கண் திறந்த முனிவர், சத்தம் போடாதே பறவைகள் பயப்படும் என்றார். கோபத்தில் அரசன் வாளை உருவ ஆயிரக்கணக்கான பறவைகள் சூழ்ந்து அரசனைக் கொத்தத் தொடங்கின. அவற்றை அமைதிப்படுத்திய முனிவர், அரசனே அதிகாரம் செலுத்துவதில் நீ பிரியம் வைத்திருக்கிறாய். ஆனால் அன்பு காட்டுவதன் அதிகாரத்தை நீ அறியவில்லை. பறவைகள் என் அன்புக்குக் கட்டுப்பட்டன. அன்பால் பெறும் வெற்றியே வெற்றி என்றார். அன்று மாறினான் அரசன். திரைப்பட நடிகர் ஒருவர் பாடினார், எல்லாம் உனக்காக என் உடலும் உயிரும் ஒட்டியிருப்பது உனக்காக 'என்று பாடினார். ஆனால் வள்ளுவர் இந்த உடலும் உயிரும் ஒட்டி இருப்பதுபோன்று ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் அன்புச் செயலும் ஒட்டி இருக்க வேண்டும் என்கிறார். அத்தகைய அன்புச் செயல் இல்லாமல் இருக்குமே என்றால் அந்த உடலும் உயிரும் அர்த்தமற்றதாகிவிடும் என்று குறிப்பிடுகின்றார்.

வேதாகமத்தில் புனித.யாக்கோபு, நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும். ஆனால், ஒருவரிடம் நம்பிக்கை இருப்பதுபோல் இன்னொருவரிடம் செயல்கள் இருக்கின்றன, என யாராவது சொல்லலாம். அதற்குபதில் செயல்கள் இன்றி எவ்வாறு நம்பிக்கை கொண்டிருக்கமுடியும் எனக் காட்டுங்கள். நானோ என் செயல்களின் அடிப்படையில் நான் கொண்டுள்ள நம்பிக்கையை உங்களுக்குக் காட்டுகிறேன். யாக் 2:17,18 என்கிறார். எனவே வாழ்க்கையில் வார்த்தையால் மட்டுமல்ல நமது செயலாலும் இறைநம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும். உயிரோடு இருப்பதற்கு அதுதான் சான்று என்கிறார்.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm